சுருக்கம்

...வளர்ச்சி – தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் ...வி.க., அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – மரபுரிமையாளர்களுக்கு ...பபுத் தொகையளித்தல் – அரசாணை – வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

<u>தமிழ் வளர்ச்சி–பண்பாடு (மற்றும்) அறநிலையத் (தவ1–1) துறை</u>

<u>...சாணை (நிலை) எண்: 117.</u> <u>நாள்: 13–5–1998.</u>

திருவள்ளுவர் ஆண்டு 2029,
வெகுதான்ய, சித்திரை 30.

05342

<u>படிக்க</u>:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித
எண். ஆ2/3703/98, நாள்: 24.4.98

***

<u>...ணை</u>:

1998–99ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் ...ர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

"கடந்த ஆண்டுகளில் தமிழ் பேரறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த் தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி அவரது வழித்தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்புநிதியாக வழங்கப்படும்"

...வறிவிப்பின் அடிப்படையில் விரிவானதோர் கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு தமிழ் ...ர்ச்சி இயக்குநரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மறைந்த தமிழறிஞர் தமிழ்த் ...ன்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு.வி.கலியாணச் ...ந்தரனார் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்குவது தொடர்பாக அவரது ...ம்பத்தாருடன் தொடர்புகொண்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன என்றும் மேலும், ...வ சித்தாந்த நூற் பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு.முத்துசாமி அவர்கள் ...ரங்களைத் தந்துதவினார் என்றும் தெரிவித்து, அவரது படைப்புகள், மரபுரிமையர் ...றிய விவரங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

2. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் எழுதப்பட்ட அனைத்து ...ல்களையும் அன்னாரின் மரபுரிமையர்களிடமிருந்து பெற்று அனைத்தையும் ...ட்டுடமையாக்கி அதற்கு ஈடாக காப்புத் தொகையாக ரூ.20 இலட்சம் (ரூபாய் ...பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கலாம் எனவும் இத்தொகையினை ...பங்காகப் பிரித்து தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் இரண்டு குடும்பங்களின் ...புரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். ...லும், காப்புநிதித் தொகையை பெறவரும் திரு.வி.க.–வின் மரபுரிமையாளர்களின் ...போக்குவரத்து செலவினம் மற்றும் அவர்களுக்கு சிறப்பு செய்தல், இசைவளிப்பு ஆவணம் ...யாரித்தல் செலவினம் தொடர்பாக ரூ.16,250/–க்கும் (ரூபாய் பதினாறாயிரத்து ...நூற்று ஐம்பது மட்டும்) ஒப்பளிப்பு கோரியுள்ளார். தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ...கருத்துருவை அரசு ஆய்வு செய்தது.

3. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் நூல்களின் பதிப்புரிமை ...ம்புகார், பாரி நிலையம் மற்றும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் ...ழகத்தாரிடம் மரபுரிமையாளர்களால் வழங்கப்பட்டுள்ளது. பதிப்புரிமை பெற்றுள்ள ...ாரி நிலையத்திற்கு ரூ.1 இலட்சமும், பதிப்பகத்தார் என்ற அளவில் பூம்புகார் ...லையத்திற்கு ரூபாய் நாற்பதாயிரம். மேலும் பதிப்புரிமை பெற்றுள்ள

தென்னிந்திய சைவ சித்தாந்த பதிப்பு கழகத்திற்கு ரூ.10,000/- அளிக்கக் கருதலா
என்றும், இரண்டு குடும்பங்களுக்கும் வழங்க உள்ள தலா ரூ.10 இலட்சத்தில் மேற்படி
தொகை போக, மீதத்தை வாரிசுதாரர்களுக்கு சமமாக பகிர்ந்தளிக்கலாம் என்றும்
அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் திரு.வி.க.-வின் நூல்கள் அனைத்தையும்
நாட்டுடமையாக்கவும், அதற்கு ஈடாக தமிழ்த் தென்றல் திரு.வி.க.-வின் குடும்பத்
நூல்களின் பதிப்புரிமை பெற்ற பூம்புகார், பாரி மற்றும் தென்னிந்திய சைவ சித்தா
நூற் பதிப்புக் கழகத்திற்கும் இணைப்பில் கண்டுள்ளவாறு (ரூபாய் இருபது இலட்சம் ப
பிரித்து பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. இக்காப்பீட்டுத் தொகையை பெறவரும் திரு.வி.க.-வின் மரபுரிமையாளர்களின் போக்குவரத்து செலவினம் மற்றும் அவர்களுக்கு சிறப்பு செய்த இசைவளிப்பு ஆவணம் தயாரித்தல் தொடர்பான செலவினம் ரூ.16,250/-க்கும் ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. தமிழ்த் தென்றல் திரு.வி.க. நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக அவரது குடும்பத்திற்கு காப்புநிதியாக வழங்கப்படும் ரூ.20 இலட்சம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
800. ஏனைய செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப்
பணிகள் - II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான
மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின்
பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் -
08. ஏனைய மானியங்கள்"
(த.தொ.கு.எண்: 2202. 05 800 JE 0988)

6. போக்குவரத்துச் செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.1000/- கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படவேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும் - I. திட்டத்தில்
சேராதது - AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம் -
60. அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/
நாள்படி".

(த.தொ.கு.எண்: 2202 05.001 AA 6009)

7. மரபுரிமையர்களுக்கு சிறப்பு செய்தல் மற்றும் இசைவு ஆவணம் தயாரித்தல் செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகை ரூ.16,250/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -
001. நெறிப்படுத்தலும், நிருவாகமும் - I.
திட்டத்தில் சேராதது - AA. தமிழ் வளர்ச்சி இயக்ககம்
- 05. அலுவலகச் செலவுகள் - 02. ஏனைய
சில்லரைச் செலவுகள்"

(த.தொ.கு.எண்: 2202 05 001 AA 0523)

8. மேலே பத்தி.3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று தமிழ்த் தென்றல் திரு.வி.க.-வின் மரபுரிமையாளர்களுக்கும் மற்றும் பதிப்பகத்தார்களுக்கும் காசோலைமூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய

..3/-

பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:1878 / [illegible],
நாள்: 11.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மரபுரிமையர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள்.
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
கல்வியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம்
(மற்றும்) அறநிலையத் துறை அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்)
அறநிலையத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[illegible]
பிரிவு அலுவலர்.
14/5/98

ாஸ்.வி.13/5.

மே.தெ.ப.க.எண் 852/3703/98 நாள்: 5.98

[illegible] அனுப்பல் செய்யப்படுகிறது

பெறுநர்

உரியவர்களுக்கு

[illegible]

[illegible]

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி – விழா – திரு வி.க., கல்கி நூல்கள் நாட்டுடைமையாக்கல் – குடும்ப நலநிதி வழங்குதல் – விழா செலவினம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் (தவ1-1) துறை**

அரசாணை (நிலை) எண்: 107. நாள்: 11-5-1998.

திருவள்ளுவர் ஆண்டு 2029,
வெகுதான்ய, சித்திரை 28

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்: ஈ3/ 4470/98, நாள்: 24.4.98

***

ஆணை:

கடந்த ஆண்டுகளில் தமிழ் பேரறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்தம் குடும்பத்தாருக்கு உரிய நிதிகள் வழங்கியது போலவே இந்த ஆண்டும் தமிழ்த்தென்றல், செந்தமிழ்ச் செம்மல், தொழிலாளர் தலைவர் திரு வி.க. அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி, அவரது வழித்தோன்றல்களுக்கு இருபது இலட்சம் ரூபாய் காப்பு நிதியாக வழங்கப்பெறவுள்ளது என்றும் அதேபோன்று தமிழர் வரலாறு, பண்பாடு, கலை-வீரம் பற்றிய புதிய இலக்கியம் பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடைமையாக்கி இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் சிறந்த எழுத்தாளராகவும் திரைப்பட வசனகர்த்தாவாகவும் விளங்கிய மறைந்த தணிகாசலம் என்கிற இளங்கோவன் அவர்களுடைய குடும்ப நல நிதியாக இரண்டு இலட்சம் ரூபாய் அரசால் வழங்கப்பெறவுள்ளது என்றும் எனவே, இம்மூன்று நிகழ்ச்சிகளையும் ஒன்றாக சேர்த்து சென்னை இராசாசி மண்டபத்தில் அரசு விழாவாக தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் நடத்துமாறு மான்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்துசமயம் (மற்றும்) அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார் என்றும் இவ்விழாவில் மான்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள் என்றும் விழாச் செலவினத்திற்கு ரூ.75,000/- (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் மேற்படி செயற்குறிப்பினை அரசு ஆய்வு செய்தது. தமிழ்த்தென்றல் திரு வி.க., பேராசிரியர் கல்கி ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கல் குடும்ப நல நிதி வழங்கும் விழா சம்பந்தமான விழாச் செலவினமா ரூ.45,000/- (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) அரசு ஒப்பளிப்பு செய்து ஆ வழங்குகிறது.

3. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி – 05. மொழி வளர்ச்சி
-800. ஏனையச் செலவு – I. திட்டத்தில் சேராதது
– AF. இலக்கியப் பணிகள் – 08. விளம்பரமும்,
பிரச்சாரமும்"

(த.தொ.கு.2202 05 800 AF 0805)

..2/-

4. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத் தொகையினை தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி 1-இன் பிரிவுக்கூறு 99-இன்கீழ் முன்பணமாகப் பெறவும், விழா முடிந்தவுடன் உள்ளபடியான செலவுச் சீட்டுகளின் அடிப்படையில் அம்முன்பணத்தை சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்பொருள் தொடர்பான விழாச் செலவுக்குரிய நிதி ஒதுக்கீடு இன்மையால் இத்தொடர்பில் வேண்டப்பெறும் கூடுதல் நிதியை 1998-99ஆம் ஆண்டிற்கான திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப் பெறுவதை எதிர்நோக்கி ...டியை அனுமதிக்குமாறு வடக்கு சம்பள கணக்கு அலுவலருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

5. இவ்வாணை,நிதித் துறையின் அ.சா.எண்:32425/கல்வி-2/98, நாள்:11.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-79(வடக்கு).

நகல்:

நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

..வி.11/5 .

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை நாட்டுடைமையாக்குதல்–மரபுரிமையாளர்களுக்கு காப்புத் தொகை வழங்கி அரசு ஆணை – வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி–பண்பாட்டுத் (தவ1–1) துறை

அரசாணை (நிலை) எண்.118

நாள்: 13.5.98
திருவள்ளுவராண்டு 2029/
வெகுதான்ய/ சித்திரை–30.

05343

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித
எண்.ஆ2/3904/98, நாள் 24.4.98.

ஆணை:

1998–99ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:

"தமிழர் வரலாறு–பண்பாடு–கலை–வீரம் பற்றிய "புதின இலக்கியம்" பல படைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்கத்தையொட்டி அவரது நூல்களை அரசுடமையாக்கி இருபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்"

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, பேராசிரியர் கல்கி ஆர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும், அதற்கு ஈடாக அவரது குடும்பத்திற்கு காப்புநிதியாக ரூ.20 இலட்சத்தை (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) அன்னாரின் மரபுரிமையாளர்களுக்கு சமபங்காக பிரித்து வாரிசு சான்றிதழின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. பத்தி 3–இல் காணும் செலவினம் ரூ.20,00,000/– கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி–05. மொழி வளர்ச்சி–
800, ஏனைய செலவு–ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–11. மாநிலத் திட்டம்–JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை–09. உதவி மானியங்கள்–08. ஏனைய மானியங்கள்"
(த.தொ.கு.எண்.2202 05 800 JE 0988)

5. போக்குவரத்துச் செலவு/ பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.100/–கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி–05. மொழி வளர்ச்சி–
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும்–1. திட்டத்தில் சேராதது– AA தமிழ் வளர்ச்சி இயக்ககம்–60. அலுவல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/ நாள்படி"
(த.தொ.கு.எண்.2202 05 001AA 6009)

..2

6. மரபுரிமையருக்கான சிறப்புசெய்தல், இசைவு ஆவணம் தயாரித்தல் மற்றும் இதர செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத்தொகை ரூ.2,000/-ஐ கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி-05. மொழி வளர்ச்சி-
001. நெறிப்படுத்தலும் நிருவாகமும்-1.
திட்டத்தில் சேராதது-AA தமிழ் வளர்ச்சி
இயக்ககம்-05. அலுவலகச் செலவுகள்-02.
ஏனைய சில்லரைச் செலவுகள்"
(த.தொ.கு.எண்.2202 05 001 AA 0523)

7. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகையைப் பெற்று மரபுரிமையாளர்களுக்கு காசோலை மூலம் வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித்துறை அ.சா.எண்.1877/எப்எஸ்/பி/98, நாள் 6.5.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
மரபுரிமையாளர்களுக்கு (இயக்குநர் மூலமாக)
மாநிலக் கணக்காயவுத் தலைவர்,
சென்னை-18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வ), சென்னை-79.
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9
கல்வியமைச்சரின் முதுநிலைநேர்முக உதவியாளர்,
சென்னை-9.
முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை-9
செயலாளர், நிதித்துறை, சென்னை-9
செயலாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(கையொப்பம்)
பிரிவு அலுவலர் 14/5/98

ரேவெ/

சென்னை - 600 103
27 JUL 1998

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மறைமலையடிகளாரின் மரபுரிமையர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்கட்கு காப்புத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை - வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (வாலாயம்) எண்.137. நாள்: 24-7-1998.

திருவள்ளுவராண்டு 2029,
வெகுதானிய, ஆடி 8.

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.180, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்: 8.7.97
2) அரசாணை (நிலை) எண்.218, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை, நாள்: 26.8.97
3) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ஆ2/6143/97, நாள்: 30.6.98

*****

ஆணை:

பார்வை 1 மற்றும் 2-இல் உள்ள அரசாணைகளில் முறையே ரூ.20 + 10 ஆக மொத்தம் ரூ.30 இலட்சம் மறைமலையடிகளின் நூல்களை நாட்டுடைமையாக்கப்பட்டதால் அவ்வாரின் மரபுரிமையாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. மறைமலையடிகளின் மரபுரிமையாளர்களில் ஒருவரான திரு.வைரமுத்து அவர்களின் முகவரி சரியாக கிடைக்கப்பெறாத நிலையில் அரசாணைகளின்படி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.30303/- + ரூ.15,151/- ஆகமொத்தம் ரூ.45,454/-ஐ அவருக்கு வழங்காமல் அரசு செலுத்துச் சீட்டின்மூலம் கருவூலத்தில் செலுத்தப்பட்டதை மீண்டும் பெற்று திரு.வைரமுத்துவுக்கு வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் உரிய ஆணையை வழங்க அரசுக்கு கருத்துரைத்துள்ளார்.

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துரையை ஏற்று, பார்வை 1 மற்றும் 2-இன்படி திரு.வைரமுத்துவுக்கு வழங்கவேண்டிய பரிவுத்தொகை ரூ.45,454/-(ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து நானூற்று ஐம்பத்திநான்கு மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட தொகையினைப் பெற்று அவ்வாருக்கு வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. திரு.வைரமுத்துவுக்கு வழங்கப்பட வேண்டிய பங்குத் தொகையை கொடுப்பதற்குமுன் அவருக்கு ஒப்பளிக்கப்பட்டத் தொகையை அரசு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

4. பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி -800. ஏனையச் செலவு - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் -II. மாநிலத் திட்டம் - JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை- தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்"

(த.தொ.கு.எண்.2202 05 800 JE 0988)

/2/

5. பத்தி 2-இல் ஒப்பளிக்கப்பட்டத் தொகை 1998-99ஆம் ஆண்டிற் திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்படும். அதற்கா கருத்துருவை தமிழ் வளர்ச்சி இயக்குநர் தக்க நேரத்தில் அனுப்புமாறு கேட்டுக் படுகிறார். மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, தமிழ் வ இயக்குநரால் சரிகட்டப்படவேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாமல் இப்பட்டியலை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்:280/த.செ(ஆர்.பி)/9 நாள்:2[illegible].7.98-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்
அரசு செயலாளர்

பெறுநர்:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
திரு. வைரமுத்து, மரபுரிமையாளர் (மறைமலையடிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

நகல்:

செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை,
சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

எஸ்.வி.24/7.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கல் – குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்படைப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (3டி) எண். 4 நாள்: 12.8.1998

திருவள்ளுவர் ஆண்டு 2029
வெகுதான்ய, ஆடி 27.

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். ஆ2/5995/98
நாள் 27.7.98.

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திரதின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, பா.ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.அய்யங்கார், வா.ரா, கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.டி.எஸ்.யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்திற்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்திற்கு தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம்

.2.

ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத்தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை |
|---|---|
| 1. திரு. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை | ரூ.5 இலட்சம் |
| 2. திரு. ப. ஜீவானந்தம் | ரூ.5 இலட்சம் |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்கா. கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி -
800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்
திட்டப் பணிகள் - 11 மாநிலத் திட்டம் - ஜே இ
தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை
தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை -
09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண். 2202 05 800 ஜேஇ 988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடியே. விழவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்: பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நி: ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரி. செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்:

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண். 470/எஸ்எஸ்/98 நாள் 11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா. சீனிவாசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலை. துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தமிழ்நாடு அரசு
<u>சுருக்கம்</u>

தமிழ் வளர்ச்சி — தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கல் — குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1-1) துறை

அரசாணை (3டி) எண்: 5 நாள்: 12.8.1998.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்: ஆ2/5995/98,
நாள்: 27.7.98.

******

<u>ஆணை</u>:-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திர தின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, பா. சிவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வா.ரா., கா.மு. ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி, சு. நெல்லையப்பர், வ.வே.சு. ஐயர், காரைக்குடி சா. கணேசன், எஸ்.டி.எஸ். யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது".

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத் தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத் தொகை |
|---|---|
| 1. நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் | ரூ.5 இலட்சம் |
| 2. திரு. வ.உ. சிதம்பரனார் | ரூ.5 இலட்சம் |

/தபிபா/

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி-800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - 11 மாநிலத் திட்டம் ஜெஇ தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்".

(த.தொ.கு.எண்: 2202 05 800 ஜெஇ 0988)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடியேற்று விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

திருத்திய

7. 1998-99 ஆம் ஆண்டு திருத்திய/இறுதி/மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப் பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையிலிருப்பினும், அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பளம்-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை- கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99 ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பில் அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்: 470/எஸ்எஸ்/98, நாள்: 11.8.98 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பளம்-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9.
மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, சென்னை-9.
இ.கோ.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.

அ/12/8/

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கல் - குடும்பத்தினருக்கு ஈட்டுத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - -

அரசாணை (3டி) எண். 6 நாள்: 12.08.1998

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்.
ஆ2/5995/98, நாள்: 27.7.98.

***

**ஆணை:**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திரத்தின பொன்விழா ஆண்டு என்பதை
உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள்
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ப. ஜீவானந்தம்,
நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்,
மூதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார்,
சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.
அய்யங்கார், வ.ரா., கா.மு. ஷெரீப், நாவலர்
சோமசுந்தர பாரதியார், பரலி, சு. நெல்லையப்பர்,
வ.வே.சு. ஐயர், காரைக்குடி சா. கணேசன்,
எஸ்.டி.எஸ். யோகி ஆகியோரை கௌரவிக்கும்
வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம்
அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடான ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ. 5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ. 10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

.......2

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை ரூ. |
|---|---|
| 1. திரு. சுத்தானந்த பாரதி | 5 இலட்சம் |
| 2. திரு. ஏ. எஸ். கே. அய்யங்கார் | 5 இலட்சம் |

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JG தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09 உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்,"

(க.தொ.கு.எண். 2202 05 800 JG 0988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்ட் 15 கொடியேற்ற விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்கத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி/மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் ஏவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண். 470/எஸ்எஸ்/98, நாள்: 11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

த.ரா. சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.

தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)

சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.

முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து, சமயம் (மற்றும்) அறநிலையத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

செயலாளரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்புக்கு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்குதல் - குடும்பத்தினருக்கு ஈட்டுத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசாணை (3டி) எண்.6 நாள்: 12.08.1998

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்.
ஆ2/5995/98, நாள்: 27.7.98.

***

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திரதின பொன்விழா ஆண்டு என்பதை
உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள்
கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, பா.ஜீவானந்தம்,
நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்,
மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார்,
சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.
அய்யங்கார், வா.ரா., கா.மு.ஷெரீப், நாவலர்
சோமசுந்தர பாரதியார், பரலி, சு.நெல்லையப்பர்,
வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா.கணேசன்,
எஸ்.எஸ்.யோகி ஆகியோரை கௌரவிக்கும்
வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம்
அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடான ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ. 5இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை ரூ. |
|---|---|
| 1. திரு. சுத்தானந்த பாரதி | 5 இலட்சம் |
| 2. திரு.ஏ.எஸ்.கே. அய்யங்கார் | 5 இலட்சம் |

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JG தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09 உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண்.2202 05 800 JG 0988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்ற சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ் 15 கொடியேற்ற விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்கத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

திருத்திய

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி/மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் ஏவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண். 470/எஸ்எஸ்/98, நாள்: 11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா. சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.

தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)

சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.

முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து, சமயம் (மற்றும்) அறநிலையத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.

கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

செயலாளரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்புக்கு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

15.17

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி– தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குதல் – குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - -

தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1.1) துறை

அரசாணை (3டி) எண்: 7

நாள்: 12.08.1998

திருவள்ளுவராண்டு 2029
வெகுதான்ய, ஆடி 27

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். ஆ2/5995/98, நாள்: 27.7.98.

---

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:

"சுதந்திரதின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.ஐயங்கார், வா.ரா., கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி, சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.எடி.எஸ்.யோகி ஆகியோரைக் கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2) மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க, மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவது தொடர்பாகத் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3) பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்களை அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4) கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்களை அனைத்தையும் நாட்டுடைமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்குத் தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

..2.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு அளிக்கத் தொகை |
|---|---|
| 1) திரு.வா.ரா. (திரு.வா.ராமசாமி) | ரூ.5 இலட்சம் |
| 2) திரு.கா.மு.ஷெரீப் | ரூ.5 இலட்சம் |

5) மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்க கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2202. பொதுக் கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800. ஏனை செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II. மாநி JE. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை தமிழ் வள இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண்.2202 05 800 JE 0988)

6) மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெ சம்மந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடி விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்கத் தக்க நட எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி/திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சமர்க்கப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத் பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதியொதுக்கீ 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப் அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.470/எஸ்எஸ்/9 நாள்.11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-108.
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/சென்னை-35.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அ
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் நேர்முக உதவியாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, சென்னை-9.

-/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்.

வேர/12/8/

தமிழ்நாடு அரசு

தமிழ் வளர்ச்சி - தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடமையாக்கல் - குடும்பத்தினருக்கு ஈட்டுத்தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசாணை (3டி) எண்.8 நாள்:12.08.1998.

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண்.
ஆ2/5995/98, நாள்:27.7.98.

***

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திரதின பொன்விழா ஆண்டு என்பதை
உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள்
கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, பா.ஜீவானந்தம்,
நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்,
மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார்,
சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே.
அய்யங்கார், வா.ரா., கா.மு.ஷெரீப்,
நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி,
சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி
சா.கணேசன், எஸ்.ஏ.டி.எஸ்.யோகி ஆகியோரை
கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களை-
யெல்லாம் அரசுடமையாக்க அரசு உத்தேசித்துள்ளது."

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

.......2

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.5 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் (ரூபாய் ப இலட்சம் மட்டும்) ஈட்டுத்தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடு

| | நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | திரு.நாவலர் சோமசுந்தர பாரதியார் | 5 இலட்சம் |
| 2. | திரு.பரலி சு.நெல்லையப்பர் | 5 இலட்சம் |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி-
800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத்
திட்டப் பணிகள் - II. மாநிலத் திட்டம் - ஜே
தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை
தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை -
09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."
(த.தொ.கு.எண்.2202 05 800 ஜேஇ 0988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்று சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 ஆகஸ்டு 15 கொடியேற்று விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழ தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி/மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீ எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவி பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக் 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறி அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

....

8. இவ்வாணை, நிதித்துறையின அ.சா.எண்.470/எஸ்எஸ்/98 நாள்:11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணையின்படி)

த.ரா.சீனிவாசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
சென்னை-108.
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/35.
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர்,
சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு,
இந்து சமயம் (மற்றும்) அறநிலையத்துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
செயலாளரின் நேர்முக உதவியாளர்,
தமிழ்வளர்ச்சி பண்பாடு (மற்றும்) அறநிலையத்துறை,
சென்னை-9.
இ.கோப்பு.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.
12/8

(19.20)

# தமிழ்நாடு அரசு

சுருக்கம்.

தமிழ் வளர்ச்சி - தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடமையாக்கல் - குடும்பத்தினருக்கு ஈட்டுத் தொகை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை.

அரசாணை (3டி) எண். 9, நாள்: 12.8.98.

படிக்க:-

தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். ஆ2/5995/98, நாள்: 27.7.98.

ஆணை:-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:-

"சுதந்திர தின பொன் விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம், முதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வா.ரா., கா.மு. ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார் பரலி, சு. நெல்லையப்பர், வ.வே.சு. ஐயர், காரைக்குடி சா. கணேசன், எஸ்.ஏடி.எஸ். யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடமையாக்க அரசு உத்தேசித்துள்ளது".

2, மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து மூதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஈட்டுத் தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை |
|---|---|
| | ரூ. |
| 1. திரு.வ.வே.சு. ஐயர் | 5 இலட்சம் |
| 2. காரைக்குடி திரு.சா. கணேசன் | 5 இலட்சம் |

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2202. பொதுக்கல்வி - 05, மொழி வளர்ச்சி - 800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியனவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண்.2202 05 800 JE 0988)

6. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையைப் பெற்று சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு 1998 அகஸ்டு 15 கொடியேற்ற விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்கத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

....3.

7. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற் குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண். 477/எஸ்எஸ்/98, நாள்: 11.8.98இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. ரா. சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.
தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள் (தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை-9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9.
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் (மற்றும்) அறநிலையத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
கல்வியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் நேர்முக உதவியாளர், தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்புக்கு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(கையொப்பம்)
பிரிவு ~~அலுவலர்~~ அலுவலர்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

---

தமிழ் வளர்ச்சி – தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கல் – குடும்பத்தினருக்கு ஈட்டுத்தொகை மற்றும் அதன் தொடர்பான இதர செலவினங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1.1) துறை

அரசாணை (நிலை) எண்: 1υ நாள்: 12.08.1998

திருவள்ளுவராண்டு 2029 வெகுதான்ய ஆடி–27

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்: ஆ2/5995/98
நாள்: 27.07.1998.

---

ஆணை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.5.98 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்:–

"சுதந்திர தின பொன்விழா ஆண்டு என்பதை உத்தேசித்து மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம், முதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.என்.கே.அய்யங்கார், வா.ரா., கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி. சு.நெல்லையப்பர், வ.வே.சு.ஐயர், காரைக்குடி சா. கணேசன், எஸ்.எடி.எஸ்.யோகி ஆகியோரை கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க அரசு உத்தேசித்துள்ளது".

2. மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேற்படி தேசிய எழுத்தாளர்களின் நூல்களை நாட்டுடமையாக்குவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. பார்வையில் குறிப்பிட்டுள்ள தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு மிகவும் கவனமாக பரிசீலனை செய்து முதறிஞர் இராஜாஜி மற்றும் அகிலன் ஆகியோரது நூல்களை நாட்டுடமையாக்க அவர்களது குடும்பத்தினர் விருப்பம் தெரிவிக்கவில்லையாதலால் அந்த இரு நூலாசிரியர்களின் நூல்களைத் தவிர எஞ்சிய தேசிய எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக ஈட்டுத்தொகை அவர்களுடைய குடும்பத்தினருக்கு வழங்கவும் அரசு கருதியுள்ளது.

4. கீழ்க்கண்ட தேசிய எழுத்தாளரின் நூல்களை நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடான அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) ஈட்டுத்தொகை வழங்க ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிடுகிறது.

| நூலாசிரியர் | குடும்பத்தாருக்கு ஈட்டுத்தொகை |
| --- | --- |
| 1. திரு.எஸ்.எடி.எஸ். யோகி | ரூ. 5 இலட்சம் |

...2.

5. இது தவிர இந்த ஈட்டுத் தொகை பெற வரும் தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினருக்கு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பார்வையில் கண்ட நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள போக்குவரத்து செலவினம் நாட்படி ஆகியவற்றிற்கு ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் அவர்களுக்கு சிறப்பு செய்தல் இசைவளிப்பு ஆவணம் தயாரித்தல் ஆகியவற்றிற்கு ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. தேசிய எழுத்தாளரின் நூல்களை நாட்டுடமையாக்கவும் அதற்கு ஈடாக அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகை ரூ.5 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 800. ஏனைய செலவுகள் - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II மாநிலத் திட்டம் - ஜேஇ. தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள் பரிசுகள் முதலியவை தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை - 09. உதவி மானியங்கள் - 08. ஏனைய மானியங்கள்."

(த.தொ.கு.எண்.2202 05 800 ஜேஇ 0988)

7. போக்குவரத்து செலவு/பயணப்படிகளால் ஏற்படக்கூடிய செலவினம் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - 1. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 60 - அலுவலல் சார்பற்ற உறுப்பினர்களுக்கு பயணப்படி/நாள்படி"

(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 6009)

8. குடும்பத்தினருக்கு சிறப்புச் செய்தல் மற்றும் இசைவு ஆவணம் தயாரித்தல் ஆகிய செலவினங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகை ரூ.15,000/-ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

"2202. பொதுக்கல்வி - 05. மொழி வளர்ச்சி - 001. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - 1. திட்டத்தில் சேராதது - ஏஏ. தமிழ் வளர்ச்சி இயக்ககம் - 05. அலுவலக செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(த.தொ.கு.எண்.2202 05 001 ஏஏ 0523)

9. மேலே பத்தி 4இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட எழுத்தாளரின் குடும்பத்தினர்களுக்கு 1998 ஆகஸ்ட் 15 கொடியேற்று விழாவில் கோட்டை கொத்தளத்திலேயே காசோலையாக வழங்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சரிகட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையில் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடனே அனுமதிக்குமாறு சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79 கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்-

செலவினத்திற்கு ஆகும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை 1998-99ஆம் ஆண்டு திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.470/சி.செ/98, நாள்: 11.8.98றில் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.ரா. சீனிவாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை-108.

தேசிய எழுத்தாளர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் மூலமாக)

சம்பள-கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.

செய்தி (மற்றும்) சுற்றுலாத் துறை, சென்னை-9.

முதலமைச்சரின் தனிச் செயலர், தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு இந்து சமயம் (மற்றும்) அறநிலையத்துறை,
சென்னை-9.

செயலாளரின் நேர்முக உதவியாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை,
சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

[signature]
பிரிவு அலுவலர்.